*ஒலி) எதிரணியினரும் பாராட்டத் துடிக்கும் அளவில், ஒரே ஆணையில் அனைவரையும் மகிழ வைத்த மகேஸ்வரன் எங்கள் தங்கம் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) இவரின் சாணக்கியத்தனம், சாணக்கியனே இவரிடம் பாடம் படிக்கத் தூண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது துறையோ சிறிது, இதன் எதிர்கால நிலையோ பெரிது என்பதை எண்ணி, தனது தீர்க்கதரிசனத்தோடு விதி 110-ன்கீழ் வழங்கியுள்ள இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டின் விஞ்ஞானப்பூர்வமான வளர்ச்சியில் ஆக்கப்பூர்வமான பங்கை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய அறிவிப்புகளை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது துறையின் சார்பாகவும், என் சார்பாகவும், எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

## 4. தகவல் கோரல்

### (அ) களக்காடு, காமராஜர் சிலையை அகற்றாமல் பாலம் அமைக்கும் பணி செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *காங்கிரஸ் கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர்களில் யாராவது ஒருவர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உங்கள் கட்சி சார்பில் யாராவது ஒருவர்தான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.*

*முற்பகல் 11-25*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள்.*

*2018 ஜூன் 1]*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *வெளியிலும் சண்டை; உள்ளேயும் சண்டை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பிரின்ஸ், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *ஆகவே, அவர்கள் தீர்மானமாக ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) இங்கே பாருங்கள். நீங்கள் அவைக்கு வருவதற்கு முன்பே யார்* zero hour-*ல்* raise *செய்வது என்று முடிவு செய்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இது கவன ஈர்ப்பு அல்ல. இது* zero hour. Zero hour-*ல் யார்* raise *செய்வது என்று முடிவு செய்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, திரு. பிரின்ஸ் அவர்கள் என்னிடம் வந்து கேட்டார். திரு. வசந்தகுமார் அவர்களும் என்னிடம் கேட்கிறார். இப்போது நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள். வாய்ப்பிருந்தால் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசுவதற்கு அனுமதி தரப்போகிறேன். இதையெல்லாம் நீங்கள் முடிவு செய்துவிட்டு வந்திருக்க வேண்டும். யார் பேசப் போகிறீர்கள் என்று நான் கேட்கிறேன். அதையும்* front bench-*ல் இருக்கிற நீங்கள் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு* recommendation *கொடுக்கிறீர்கள். இதுவெல்லாம் முறையல்ல, உட்காருங்கள். திரு. எச். வசந்தகுமார், சொல்லுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் அருமையான திட்டங்களை எல்லாம் கொடுத்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 1954-ல் தாழ்ந்து கிடந்த தமிழக மக்களெல்லாம் கல்வியில் எப்படி உயர வேண்டுமென்று தன்னையே அர்ப்பணித்தாரோ, அந்த மாபெரும் பெருந்தலைவர் காமராஜரை மனதில் நிறுத்தி, இன்று நீங்கள் அறிவித்திருப்பது ஒரு சமுதாயத்தில் வெற்றிகொள்கின்ற நிகழ்ச்சியாக இருக்கிறது. எதை எடுத்தாலும் கான்வென்ட்டில் படிக்க வேண்டுமென்ற நிலையை மாற்ற வேண்டுமென்பதற்காக நீங்கள் அவர்களையும் மிஞ்சிப் போய்விட்டீர்கள் என்பதை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில்*

[திரு. எச். வசந்தகுமார்] [2018 ஜூன் 1

நமது பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலை களக்காடு பகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு பாலம் வேண்டுமென்று தமிழக அரசிடம் நான் வேண்டுகோள் விடுத்தேன். தமிழக அரசும் அதற்கு ரூ.78 இலட்சம் நிதி உதவி செய்தது. அதை 3 மாவட்டங்களுக்குப் பொறுப்பாளராக இருக்கின்ற S.E. அவர்களை அழைத்துச் சென்று அந்தப் பாலம் எப்படி வரவேண்டும்; காமராஜர் அவர்களின் சிலையை அகற்றாமல் எப்படி ரோடு வரும் என்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வசந்தகுமார், zero hour-ல் பேசுவதற்கு உங்களுக்கு நான் அனுமதி தந்தேன். நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல், பேசினால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) நீங்கள் விளக்கமாகச் சொன்னால், நான் என்ன செய்ய முடியும்? உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) கடுமையான போட்டிக்கு இடையில் zero hour-ல் நீங்கள் பேசுவதற்கு அனுமதி அளித்தேன். நீங்கள் மானியக் கோரிக்கையிலே பேசுவதுபோல பேசினால், நான் என்ன செய்வது? (குறுக்கீடு) நீங்கள் பாராட்டுவதோடு நிறுத்திக்கொண்டு, மேற்கொண்டு உங்கள் கோரிக்கையைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. இது சரியில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நான் என்னவென்று பார்க்கிறேன். அனுமதியில்லாமல் நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எச். வசந்தகுமார்:** காமராஜர் சிலையை அகற்றாமல் இருப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலிலே அதைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதி கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். தேவை இல்லாததையெல்லாம் பேச வேண்டாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.